செ.வெ.எண்: 16

நாள்: 08.01.2024.

# செய்திக்குறிப்பு

மதுரை மத்தியசிறை கட்டுப்பாட்டிலுள்ள கட்டுப்பாட்டிலுள்ள புரசடை உடைப்பு திறந்த வெளிச்சிறையில் காலியாக உள்ள தூய்மைப் பணியாளர் பணியிடத்தை பூர்த்தி செய்திட அறிவிப்பு

---

மதுரை மத்தியசிறை கட்டுப்பாட்டிலுள்ள புரசடை உடைப்பு திறந்த வெளிச்சிறையில் தூய்மைப் பணியாளர் பணியிடம் ஒன்று காலியாக உள்ளது. இப்பணியிடம், BC (Other than BCM)-Non Priority, என்ற இன சுழற்சிக்கு ஒதுக்கப்பட்டதாகும். இப்பணியிடத்தில் நேரடி நியமனத்திற்கு தகுதியான மேற்படி பிரிவினைச் சார்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தூய்மைப் பணியாளர் பணியிடத்திற்கு 01.07.2022 அன்றைய நிலையில் குறைந்தபட்சம் வயது தகுதி 18 ஆகவும், அதிகபட்ச வயது (OC-32, BC&MBC-34, SC&ST, SCA-37) ஆகவும் உள்ளது. முன்னாள் இராணுவத்தினருக்கு வயது வரம்பு இல்லை. தூய்மைப் பணியாளர் பதவிக்கு குறைந்தபட்ச கல்வித்தகுதியாக தமிழில் எழுத படிக்க தெரிந்து இருக்க வேண்டும். இப்பதவிக்கு நடைமுறையிலுள்ள PB 1A ரூ.15700 – 58100 (Level-1) என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் மற்றும் பிறபடிகள் பெற்று வழங்கப்படும். தகுதியுள்ள நபர்கள் தங்களது கல்வி சான்று, ஜாதி சான்று மற்றும் பிற சான்றுகளின் நகல்களுடன் விண்ணப்பத்தினை "சிறைக்கண்காணிப்பாளர், மத்தியசிறை, மதுரை–16" என்ற முகவரிக்கு 25.01.2024–க்குள் கிடைக்கும் வகையில் அனுப்பி வைத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

18/12/23

சிறை கண்காணிப்பாளர்,
மத்தியசிறை,மதுரை.

18/12/23